**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

**பாடத்திட்டம்**

**மரபுவழி சிற்பக்கலை (Traditional Sculpture) (இளநிலை பட்டப் படிப்புத் தரம்)**

**குறியீடு: 479**

**அலகு I: இந்திய கட்டட, சிற்ப மற்றும் ஓவியக் கலை வரலாறு (15 வினாக்கள்)**
பண்டையகால சிற்பங்கள் மற்றும் கட்டடங்களின் தோற்றம் – சிந்து சமவெளி நாகரிக கட்டுமானங்கள் மற்றும் சிற்பங்கள் – முத்திரைகள் – சித்திர எழுத்துக்கள் – வேதகால கட்டடக்கலை – மௌரியகால பௌத்த கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை – சுங்க, சாதவாகனர் கால கலைகள் – குப்தர் கால கட்டுமானக் கோயில்கள் மற்றும் சிற்பங்கள் – சாளுக்கியர் கால குடைவரைக் கோயில் மற்றும் கட்டுமானக் கோயில்கள் – இராஷ்டிரகூட கால கோயில் சிற்பங்கள் – கலிங்க கட்டிடக் கலை மற்றும் சிற்பக்கலையின் தனித்துவம் – ஹெய்சாளர் வரலாறும், அவர்களது கலை பங்களிப்பும்.

**அலகு II: தமிழக கட்டட, சிற்பக்கலை வரலாறு (20 வினாக்கள்)**
தமிழர்களின் கட்டடக்கலையின் தனித்துவம் – நாகர, திராவிட, வேசரம் சார்ந்த கட்டடக்கலை ஒப்பீடு – கீழடி, ஆதிச்சநல்லூர், பூம்புகார், கொடுமணல் கட்டுமானங்கள் – பல்லவர்களின் குடைவரைக் கோயில்கள் கட்டுமானக் கோயில்கள், ஒற்றைக்கல் இரதங்கள் இராஜராஜ சோழன், இராஜேந்திரச்சோழன் கால கோயில் மற்றும் சிற்பங்கள் – பாண்டியர் கால, விஜயநகர, நாயக்கர்கால கலை மற்றும் கட்டடக்கலை.

**அலகு III: மரபு சிற்பங்களின் அளவு இலக்கணம் (30 வினாக்கள்)**
சிற்பத்துறை அளவைகள் – படிம வகைகள் – அறுவகை மானங்கள் – தாள மானங்கள் – தெய்வத் திருமேனி உயர நிர்ணயம் – பங்க இலக்கணம் – ஆடை ஆபரணங்கள் – தலைக் கோலங்கள் – கை முத்திரைகள் – ஆசனங்கள் – ஆயுதங்கள் மற்றும் லிங்கத்திருமேணிகள்.

**அலகு IV: மரபு சிற்பங்களின் உருவ அமைதிகள் (25 வினாக்கள்)**
32 கணபதிகள் – 16 சுப்ரமணியர்கள் – 16 சிவ மூர்த்தங்கள் – சப்தமாதர்கள் சக்தி திருமேனிகள் – சப்த தாண்டவம் – 63 நாயன்மார்கள் – அஷ்டதிக் பாலகர்கள் – தச அவதாரப் படிமங்கள் விஷ்ணுவின் நின்ற, அமர்ந்த மற்றும் கிடந்த திருக்கோலங்கள் – யோகம், போகம், வீரம் ஆபிசாரிக வகைகள் – 12 ஆழ்வார்கள் – கருட மற்றும் ஆஞ்சநேயர் இலட்சணம்.

**அலகு V: இதிகாச புராணங்களில் சிற்பக் கலை (15 வினாக்கள்)**
இராமாயணம், மகாபாரத காட்சி சிற்பங்கள் – மகாகவி காளிதாசர் படைப்புகள் – பெரியபுராணம் – கந்தபுராணம், திருவிளையாடல் புராணங்களில் சிற்பக்கலை – சிலப்பதிகார காட்சி படைப்புகள்.

**அலகு VI: கோயில் தேர் மற்றும் வாகன இலக்கணம் (15 வினாக்கள்)**
கோயில் திருவிழாக்களின் முக்கியத்துவம் – கோயில் விழாக்களில் தேர் மற்றும் வாகனங்களின் முக்கியத்துவம் – தேரின் அமைப்பு இலக்கணம் – தேரின் வகைகள் – வாகனங்களின் அளவு மற்றும் அமைப்பு முறைகள் – தங்கரதம், வெள்ளிரதங்களின் அமைப்புமுறை – சகடை, சப்பரங்களின் அமைப்புமுறை – தேர் மற்றும் வாகன பாதுகாப்பு, பராமரிப்பு முறைகள் – வண்ணம் தீட்டும் முறைகள் – கொடிமர அமைப்பு மற்றும் இலக்கணம்.

**அலகு VII: சிற்ப ஆகமம் (25 வினாக்கள்)**
சிற்பரத்தினம், சகளாதிகாரம், மானசாரம், மயமதம், சாரஸ்வதீய சித்தரகர்மசாஸ்திரம், பிராமீய சித்தரகர்மசாஸ்திரம் – ஆயாதி கணிக்கும் முறை – கல், மரம் தேர்ந்தெடுத்தல் – நான்கு வகை சிற்பிகளின் இலக்கணம் – ஆலய நிலம் தேர்வு செய்தல் – திசையறிதல் – கர்பக்கிருஹ பதவின்யாசம் – கர்ப்பக்கிருஹ பதவின்யாசம் மற்றும் மூர்த்தி ஸ்தாபனம் – கண் திறத்தல் – அஷ்டபந்தனம் தயாரிப்பு முறை – யாகசாலை, குண்டம், வேதிகை அமைப்பு முறை – கடுசர்க்கரை படிமம் தயாரித்தல் – விமான கோஷ்டதேவதைகள் – சைவ, வைணவ, சாக்த பாரிவார ஆலயங்கள் – நவக்கிரஹ ஸ்தாபன முறை.

**அலகு VIII: ஆலயங்களில் செப்புத்திருமேனிகள் (20 வினாக்கள்)**
உலோகப் படிமங்களின் முக்கியத்துவம் – உற்சவப்பேரம் பலிபேரம், ஸ்நபனபேரம், கௌதுகபேரம் – செப்புத்திருமேனிகளின் அளவு முறைகள் – கருக்கட்டுதல் – உலோக கலவை முறைகள் – வார்ப்பு செய்தல் – உலோகப் படிமங்களை பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.

**அலகு IX: தமிழக வரலாற்றில் கிராம தேவதைகள் (15 வினாக்கள்)**
தமிழர்களின் தொன்மை வழிபாடு – கிராம தேவதைகளின் தோற்றம் – நடுகல்சிற்பங்கள் – மாரியம்மன் – இசக்கி அம்மன், ஐய்யனார், கருப்பசாமி, மாடசாமி, பேச்சிஅம்மன், முனீஸ்வரன், பொரியாண்டவர் – நாகவழிபாடு – புற்றுவழிபாடு, சப்தகன்னிகள் வழிபாடு, அண்ணன்மார் வழிபாடு.

**அலகு X: கோயில் சிற்பங்களை பராமாரித்தலும், பாதுகாத்தலும் (20 வினாக்கள்)**
சிற்பங்களை புனரமைத்து, பாதுகாத்தலில் சிற்பிகளின் பங்கு – முதல் நிலை அறிக்கை தயாரித்தல் – தேவையான மூலப்பொருட்களை பரிந்துரை செய்தல் – பழுதிற்கான காரணம் அறிந்து கொள்ளுதல் – பழமை மாறாமல் புதுப்பித்து பராமாரித்தல்.

**குறிப்பு:** இப்பாடத்திட்டம் தமிழ்மொழியில் மட்டும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

Dated: 06/08/2024